[பேரவைத் தலைவர்] [2002 அக்டோபர் 29

முற்பகல் 11-40

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டு, தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)

என்ன, சொல்லுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, இனிமேல் அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடுகள்)*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்து எட்டாவது மற்றும் ஐம்பத்து ஒன்பதாவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்பாக வந்து அமர்ந்துகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன், *(குறுக்கீடுகள்)*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

***திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதிமூன்றாவது மற்றும் பதினான்காவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)